இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 143 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 18 – வெள்ளிக்கிழமை 02 ஜனவரி 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 143: Thiruvalluvar Year - 2056 - Margazhi 18 - Friday 02 January 2026 - Chennai 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2026) முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா ஆகியோர் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## நாடு போற்றும் ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திடும்

## ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுப் பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு!

# மிகை ஊதியம் வழங்கிட ரூ.183.86 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜன.2-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2024-2025ஆம் ஆண்டிற்கான ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம்; ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டக் கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

நாடுபோற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024-2025ஆம் ஆண்டிற்கான



மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி சுமார் 9 இலட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்த உத்தரவின்படி,

1. ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

2. தொகுப்பூதியம், சிறப்புகால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2024-2025ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்

3. “சி” மற்றும் “டி” பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## உத்தரப்பிரதேசத்தோடு ஒப்பிடுவது பிழையானது!

# வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது!

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி!

**காரைக்குடி, ஜன.2-**

**“வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்பெறுகிறது” என்றும் “உத்தரப்பிரதேசத்தோடு ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது” என்றும் ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.**

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்படி இறந்தவர்கள் என 24 லட்சம் பேரை நீக்கி உள்ளனர். இரட்டைப் பதிவு என 3.5 லட்சம் பேரை நீக்கியுள்ளனர். வாக்காளர் பட்டியலில் கொல்கத்தா, பீகார் மாநிலங்களில் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் ‘முகவரி இல்லாதவர்கள்’ என்ற பகுதியைச் சேர்த்துள்ளனர். அதன்படி66லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர் உள்ளனர். இதில், ஒரு சிலர் போலியாக இருக்கலாம். அவர்களை நீக்குங்கள். தங்களை நீக்கியது தவறு என்று 7.5 லட்சம் பேர் மனு கொடுத்திருக்கின்றனர்.



இவை 10 லட்சத்தை தாண்டும்.

அப்படி என்றால் முகவரி இல்லாதோர் 66 லட்சம் பேர் என்பதும் தவறாகிறது. பொதுமக்களும், கூட்டணிக் கட்சியினரும் விழிப்போடு செயல்பட்டு தேர்தல் ஆணையத்தின் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும்.

### எங்கள் கூட்டணி வெல்லும்!

நாங்கள் இந்தியா கூட்டணியில் இருக்கிறோம். 5 பேரை கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை நடத்துவதற்காக காங்கிரஸ் தலைமை நியமித்து இருக்கிறது. இந்த 5 பேரும் முதல் அமைச்சரையும், மற்ற தலைவர்களையும் சந்தித்து பேச உள்ளனர். இந்தியா கூட்டணி ஒற்றுமையாக, வலிமையாக தேர்தலை சந்திக்கும். இந்த தேர்தலில் எங்கள் கூட்டணி வெல்லும் என்பது என் முழு நம்பிக்கை. த.வெ.க. தலைவர் விஜய் முயற்சி வெல்லாது.

### காந்தி பெயரை நீக்கியது கண்டனத்துக்குரியது!

தொகுதி பங்கீடு குறித்து தி.மு.க., காங்கிரஸ் கட்சி தலைவர்கள் முடிவெடுப்பார்கள். மற்றவர்கள் கருத்து சொல்லலாம். ஆனால் முடிவு தலைவர்கள் 2 பேருக்கு இடையேதான். திட்ட கமிஷனின் தற்போதைய நிதி ஆயோக் அறிக்கையில் இந்திய மாநிலங்களிலேயே வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் என்பது தெளிவாக உள்ளது. அதனால் உத்தரப் பிரதேசத்தோடு ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. 100 நாள் வேலைத் திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியது கண்டனத்துக்குரியது.

### இதனை ஏற்க முடியாது!

இதற்கான திட்டச்செலவுகளில் 60 சதவீதம் மத்திய அரசும், 40 சதவீதம் மாநில அரசும் கொடுக்க வேண்டும். நிதிச்சுமை உள்ள மாநிலங்களினால் இதனை ஏற்க முடியாது. 100 நாட்களுக்கே வேலை கொடுக்க முடியாத நிலையில் 125 நாட்களுக்கு வேலை என்பது சாத்தியமா என தெரியவில்லை.

பல மத்திய பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை மத்திய அரசுதானே நியமிக்கிறது? மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாநில அரசு ஏன் துணை வேந்தரை நியமிக்கக்கூடாது?

தமிழ்நாட்டில் பழைய ஓய்வூதிய திட்டம் குறித்து ககன் தீப்சிங் பேடி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழு அறிக்கையும் கொடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் அரசு தீர்மானிக்கும். திருப்பரங்குன்றத்தில் பல ஆண்டுகளாக இருக்கும் ஒரு பழக்கவழக்கத்தை யாரும் மாற்ற முயற்சிக்கக்கூடாது. அதனை கடைப்பிடிக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஆட்சியில் பங்கு, கூட்டணி ஆட்சி ஏற்படுமா? என்பதெல்லாம் 2 கட்சித்தலைவர்களும் முடிவெடுப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது கார்த்தி சிதம்பரம் எம்.பி. உடனிருந்தார்.

---

## திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகரில் மினி டைடல் பூங்காக்கள் !

## டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு!

*சென்னை, ஜன.2-*

*திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய 3 மாவட்டங்களில் மினிடைடல்பூங்காக்களை அமைப்பதற்கான கட்டுமான பணிகளுக்கு தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.*

*இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு அரசால் மாநிலம் முழுவதும் டைடல் நியோ பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு டைடல் பூங்காவிலும் 500 முதல் 1000 தகவல் தொழில்நுட்ப பணி*



*யாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது. பொறியியல் கல்லூரிகளில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக சென்னை, பெங்களூரு போன்ற நகரங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க, உள்ளூர்களிலேயே வேலை வாய்ப்பு உருவாக்குவதே டைடல் நியோ பூங்காக்களின் முக்கிய நோக்கமாகும்.*

*அதன்படி, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதனைத்தொடர்ந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய 3 மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.*

*இந்நிலையில், இதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.*

---

## சீனா கூறியது குறித்து பிரதமர் விளக்கமளிக்க காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன.2–

இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக சீனா கூறியது குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என, காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அமெரிக்க அதிபர் டிரம்ப் 7 நாடுகளில் 65 முறை இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக தெரிவித்துள்ளார். ஆனால் பிரதமர் மோடி இது குறித்து இன்னும் மவுனம் கலைத்ததில்லை. இப்போது சீன வெளியுறவுத் துறை அமைச்சரும் இதேபோன்ற கூற்றை முன்வைத்து சீனாவும் மத்தியஸ்தம் செய்ததாக கூறுவதை குறிப்பிட்டுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியா உண்மையில் சீனாவை எதிர் கொண்டு போரிட்டது என்று ராணுவ தளபதி பகிரங்கமாக கூறியிருந்தார்.

இந்நிலையில், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ததாக கூறும் கூற்றுக்கள் கவலைக்குரியவை. இது நாட்டின் தேசியப் பாதுகாப்பையே கேலிக்கூத்தாக்குவது போன்று தெரிவதாக கூறியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் திடீரென நிறுத்தப்பட்டதில் சீனா என்ன பங்கு வகித்தது என்பது குறித்து இந்திய மக்களுக்கு தெளிவு தேவை. பிரதமர் மோடி இது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.